# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
# The Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka

අති විශෙෂ அதிவிசேஷமானது EXTRAORDINARY

අංක 909/13 – 1996 පෙබරවාරි 09 වැනි සිකුරාදා – 1996.02.09
909/ 13 ஆம் இலக்கம் – 1996 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
No. 909/13 - FRIDAY, FEBRUARY 09, 1996

(ආණ්ඩුවේ බලය පිට ප්‍රසිද්ධ කරන ලදී.) (அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது) (Published by Authority)




## பகுதி I: தொகுதி (I) — பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. - பீ. 21/78 IV.

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டம்**

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24 அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான 18 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச்சட்டம்.

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
1996 பெப்புருவரி 8.

**கட்டளைச் சட்டம்**

1. இக்கட்டளைச் சட்டம் 1996 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அறிவியல் பட்டப்பின்படிப்பு நிறுவகக் கட்டளைச்சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், 1996 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 12 ஆம் தேதியன்று வலுவுக்கு வருதலும் வேண்டும்.

2. (இதனகத்துப் பின்னர் "சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24 ஆ என்னும் பிரிவின்கீழான கட்டளையால் ஆக்கப்பட்ட (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பட்டப்பின்படிப்பு நிறுவகத்துக்கு இக்கட்டளைச் சட்டம் ஏற்புடையனவாதல் வேண்டும்.

3. இந்நிறுவகமானது (இதனகத்துப்பின்னர் "பல்கலைக்கழகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்ததாதல் வேண்டும்.

4. சட்டத்தினதும் தோதான ஏதேனும் சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கும், ஆணைக்குழுவினது தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றுக்கும் அமைய, நிறுவகமானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) மாணவர்களைச் சேர்த்தல் ;

(ஆ) நிறுவகத்தினதும் பல்கலைக்கழகத்தினதும் விதப்புரையின்மீது ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படக் கூடியவாறாகப் பட்டப்பின் அறிவியலின் அத்தகைய விசேஷ கிளைகளில் போதனைக்கும் பயிற்சிக்கும் ஆராய்ச்சிக்கும் ஏற்பாடு செய்தல் ;

(இ) பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்தோடும் ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடனும் அறிவியலின் பல்வேறு விசேஷ கிளைகளில் அளிக்கப்படவுள்ள பட்டப்பின்படிப்புப் பட்டங்கள், திப்புலோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புத் தகைமைகள் ஆகியவற்றைத் தீர்மானித்தல் ;

(ஈ) அறிவியலில் உள்ள பல்வேறு விசேஷ துறைகளில் புலமைபெற்றுள்ள ஆட்களைக் கண்டறியும் நோக்கங்களுக்காக, பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடன் பட்டப்பின்படிப்புப் பரீட்சைகளை நடாத்துதலும் அத்தகைய பரீட்சைகளில் சித்தியடைவதோடு நிறுவகத்தின் ஆலோசனையுடன் துணைவிதி மூலம் பல்கலைக்கழகம் விதித்துரைக்கக் கூடியவாறான அத்தகைய வேறு நிபந்தனைகளைத் திருப்தி செய்து, பல்கலைக்கழகத்தின் பட்டப்பின்படிப்புப் பட்டங்கள் திப்புலோமாக்கள், சான்றிதழ்கள் அத்துடன் வேறு கல்விச் சிறப்புகள் வழங்கப்படுவதற்கும் தகுதியுடைய ஆட்களைப் பல்கலைக்கழகத்துக்குச் சிபார்சு செய்தல் ;

(உ) நிறுவகத்தின் குறிக்கோள்களை ஒத்த அல்லது பொருளளவில் ஒத்த குறிக்கோள்களைக் கொண்ட இலங்கையில் அல்லது வெளிநாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களுடன் அல்லது நிறுவனங்களுடன் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கல்விமான்கள் என்போரைப் பரிமாற்றஞ் செய்வதன்மூலம் ஒத்துழைத்தல் ;

(ஊ) பல்கலைக்கழகங்களிலும் பல்கலைக்கழக மட்டத்திலான கல்வியிடங்களிலும் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு நாடும் ஆட்களினால், அல்லது பல்கலைக்கழகங்களிலும் பல்கலைக்கழக மட்டத்திலான கல்வியிடங்களிலும் நிறுவகத்தின் மாணவர்களினால் தேறப்பட்ட பரீட்சைகளையும் பின்பற்றப்பட்ட படிப்பு அல்லது கற்கைக் காலப்பகுதிகளையும் அல்லது துணை விதியால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பாகத்தையும் நிறுவகத்திலான பரீட்சைகளுக்கும் படிப்பு அல்லது கற்கைக் காலப் பகுதிகளுக்கும் சமமானவையாக ஏற்றங்கீகரிக்கப்படும் நோக்கத்திற்கு விதிப்புரை செய்தலும் எதேனும் நேரத்தில் அத்தகைய அங்கீகாரத்தின் மீளப்பெறுகையை விதந்துரைத்தலும்.

(எ) போதனை, பயிற்சி அல்லது ஆராய்ச்சி நோக்கத்திற்காக நூலகங்களையும், ஆய்கூடங்களையும் ஏனைய கட்டிடங்களையும் நிறுவகத்தின் நோக்கத்துக்காக நிறுவுதலும் சாதனமிடுதலும், பேணுதலும் ;

(ஏ) நிறுவகத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக்கூடியவாறான பேராசிரியர் பதவிகள், இணைப் பேராசிரியர் பதவிகள், சிரேட்ட விரிவுரையாளர்கள் பதவிகள், விரிவுரையாளர்கள் பதவிகள் மற்றும் வேறு கல்விசார் பதவிகள் என்பவற்றை நிறுவுதல், ஒழித்தல் அல்லது இடை நிறுத்தம் செய்தல் பற்றிப் பல்கலைக்கழகத்துக்கு விதந்துரைத்தல் ;

(ஐ) இணையுரிமைப் பரிசில்கள், புலமைப் பரிசில்கள், சிறப்புப் பரிசில்கள், பண உதவிகள், பதக்கங்கள் மற்றும் வேறு பரிசில்கள் என்பவற்றை நிறுவுதலும் அளித்தலும் ;

(ஒ) அதற்கென ஏற்பாடு செய்யும் ஏதேனும் துணை விதிக்கிணங்க பல்கலைக்கழகத்திற்கும் நிறுவகத்திற்கும் வெளியிலுள்ள இடங்களில் ஆராய்ச்சிகளையும் பயிற்சி நெறிகளையும் அல்லது பயிற்சி நெறிகளின் பாகங்களையும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்தல் ;

(ஓ) பல்கலைக்கழகத்தின் ஒருமைப்பாட்டுடன் நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஆட்களை நிறுவகத்தின் ஆசிரியர்களாகவும் பரீட்சகர்களாகவும் ஆராய்ச்சி மேற்பார்வையாளர்களாகவும் நியமித்தல்.

(ஔ) அதற்கென ஏற்பாடு செய்யும் ஏதேனும் விதிக்கிணங்க கட்டணங்களைக் கோரிப் பெறுதல் ; அத்துடன்

(க) நிறுவகத்தின் தத்துவங்களைப் பிரயோகிப்பதில் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் வேறு காரியங்களையும் செய்தல்.

5. நிறுவகத்தின் அலுவலர்கள் பின்வருவோராதல் வேண்டும்:-

(அ) பணிப்பாளர் ; அத்துடன்

(ஆ) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலர்.

6. (1) நிறுவகத்தின் முதலாவது பணிப்பாளர் இக் கட்டளைச் சட்டம் வலுவுக்கு வருவதன் மீது ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும். அடுத்துப் பின்னரான ஒவ்வொரு பணிப்பாளரும் நிறுவகத்தின் முகாமைச் சபையினால் விதந்துரைக்கப்பட்ட மூன்று ஆட்களைக்கொண்ட ஒரு குழாத்திலிருந்து ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுதலும் வேண்டும்.

(2) உயர்கல்வி நிறுவனமொன்றின் பணியாட்டொகுதி உறுப்பினர் ஒருவர் அத்தகைய நிறுவனத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டவிடத்து, அத்தகைய நிறுவனம் அத்தகைய உறுப்பினரை இந் நிறுவனத்தின் பணிப்பாளர் பதவியை ஏற்க விடுவிக்க வேண்டும்.

(3) பணிப்பாளர், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அல்லது (4) ஆம் உட்பந்தியின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து கணக்கிடப்பட்ட மூன்றாண்டுக் காலப்பகுதியொன்றுக்கு அல்லது அவரது அறுபத்தைந்தாவது வயதைப் பூர்த்தி செய்யும் வரை இவற்றுள் எச்சம்பவம் முதலில் நிகழ்கின்றதோ அச்சம்பவம் நிகழ்கின்றதைப் பொறுத்து, பதவி வகித்தல் வேண்டும்.

(4) பணிப்பாளர், அந்நோக்கத்துக்கெனக் கூட்டப்பட்ட ஒரு விசேட கூட்டத்தில், முகாமைச் சபையின் மொத்த உறுப்பாண்மையில் மூன்றில் இரண்டிற்குக் குறையாதவர்களினால் நிறைவேற்றப்பட்ட கண்டன வாக்கின்மீது ஆணைக் குழுத் தவிசாளரினால் பதவியிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும். அத்தகைய விசேட கூட்டத்தில் சமுகமாயிருக்கும் உறுப்பினர்கள், தம்மிடையேயிருந்து அத்தகைய விசேட கூட்டத்தில் தலைமைதாங்கவென, பணிப்பாளர் தவிர்ந்த ஆளொருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(5) பதவி நீக்குகின்ற அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுகின்ற பணிப்பாளர், பணிப்பாளராக அவர் நியமிக்கப்படுவதற்கு நேர்முன்னர் ஓர் உயர் கல்வி நிறுவனத்தின் பணியாட்டொகுதியின் உறுப்பினரொருவராக இருந்திருந்தால், அத்தகைய உயர் கல்வி நிறுவனத்தில் அவரது நிலையான பதவிக்குத் திரும்பிச் செல்லல் வேண்டும். ஆயினும் அவர் தனது அறுபத்தைந்தாவது வயதைப் பூர்த்தி செய்திருத்தலாகாது.

(6) பணிப்பாளர், சுகவீனம், இலங்கையில் இல்லாமை, அல்லது வேறு காரணத்திற்காகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக இருப்பின், ஆணைக்குழுவினது அத்தகைய இயலாமை ஏற்படுவதன்மேல் பணிப்பாளரின் பதவிக்குரிய கடமைகளைக் கொண்டு நடாத்துவதற்குத் தகுதியென அது எண்ணக்கூடியவாறான அத்தகைய ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும். அத்தகைய ஒழுங்குகள் செய்யப்படும்வரை பல்கலைக்கழகப் பதிவாளர் அத்தகைய பதவிக்குரிய நாளாந்தக் கடமைகளைக் கொண்டு நடாத்துதல் வேண்டும்.

(7) பணிப்பாளர் பதவியின் ஏதேனும் வெற்றிடம் ஏற்படுமாயின், ஆணைக்குழுவானது, அத்தகைய வெற்றிடம் ஏற்படுவதன்மேல் (1)ம் உட்பந்தியின் கீழ் நிரந்தர நியமனமொன்றை செய்யப்படும்வரை, பணிப்பாளரின் பதவிக்குரிய கடமைகளைக்கொண்டு நடாத்துவதற்குத் தகுதியென அது எண்ணக்கூடியவாறான அத்தகைய ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும். அத்தகைய ஒழுங்குகள் செய்யப்படும்வரை பல்கழைக்கழகப் பதிவாளர் அத்தகைய பதவிக்குரிய நாளாந்தக் கடமைகளைக் கொண்டுநடாத்துதல் வேண்டும்.

7. (1) பணிப்பாளர், நிறுவகத்தின் முழுநேர அலுவலராதல் வேண்டுமென்பதுடன், அதன் பிரதான நிறைவேற்று அலுவலராகவும் பிரதான கல்வி அலுவலராகவும் இருத்தலும் வேண்டும். அவர் முகாமைச் சபையின் பதவிவழி உறுப்பினராகவும் தவிசாளராகவும் நிறுவகத்தின் கற்கைச் சபை ஒவ்வொன்றினதும் பதவிவழி உறுப்பினராகவும் இருத்தல் வேண்டும். அவர் நிறுவகத்தின் ஏதேனும் அதிகாரசபையின் அல்லது குழுவின் ஏதேனும் சட்டத்தில் சமுகமாயிருக்கவும் உரையாற்றவும் உரித்துடையவராதல் வேண்டும் ; ஆனால் அவர் அத்தகைய வேறு அதிகாரசபையின் அல்லது குழுவின் உறுப்பினரொருவராக இருந்தாலொழிய, அத்தகைய ஏதேனும் கூட்டத்தில் வாக்களிக்க உரித்துடையவராதலாகாது.

(2) பணிப்பாளர் முகாமைச்சபையினால் அதற்கென அவருக்குக் காலத்துக்குக் காலம் சட்டமுறையாக வழங்கப்படக்கூடிய அத்தகைய பணிப்புகளுக்கிணங்க, இக்கட்டளைச் சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகள், அவை நிறுவகத்தோடு தொடர்புபடும் அளவுக்கு உரிய முறையில் பின்பற்றப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவது அவரது கடமையாதல் வேண்டும ; அத்துடன் அந்நோக்கத்துக்கு அவர் அவசியமெனக்கருதக்கூடிய அத்தகைய தத்துவங்கள் எல்லாவற்றையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அவர் அவற்றைப் பிரயோகிக்கவும் முடியும்.

(3) முகாமைச் சபையினது ஒவ்வொரு கற்கைச் சபையினதும் முடிபுகளுக்குப் பயன்கொடுப்பது அல்லது பயன்கொடுக்கப்படுவதை உறுதிப்படுத்துவது பணிப்பாளரின் கடமையாதல் வேண்டும்.

(4) பணிப்பாளர் நிறுவகத்தில் கணக்கீட்டு அலுவலராகவிருத்தல் வேண்டும்.

(5) பணிப்பாளர் நிறுவகத்தின் ஒழுக்காறைப் பேணுவதற்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

8. நிறுவகத்தின் அதிகாரசபைகள் பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) முகாமைச் சபை ;
(ஆ) கற்கைச் சபை அல்லது சபைகள் ; அத்துடன்
(இ) ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு அதிகாரசபைகள் ;

9. (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முகாமைச் சபை நிறுவகத்தின் கல்விசார், மற்றும் நிறைவேற்றுக் குழுவாதல் வேண்டுமென்பதுடன், பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தலும் வேண்டும் :-

(1) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள், அதாவது --

(அ) பணிப்பாளர் ;

(ஆ) உயர்கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் நியமத்தர் ;

(இ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் நியமத்தர் ;

(ஈ) அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் நியமத்தர் ;

(உ) 1981 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்கச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் ;

(ஊ) (164 ஆம் அத்தியாயமான) 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவகப் பணிப்பாளர் ;

(எ) 1981 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்கச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை இயற்கை மூலவளங்கள் சக்தி, விஞ்ஞான அதிகாரசபைப் பணிப்பாளர் ;

(ஏ) 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கச் சுரங்கங்கள், கனிப்பொருள்கள் சட்டத்தால் தாபிக்கப்பட்ட புவியியல் அளவீட்டுச் சுரங்கங்கள் பணியக பணிப்பாளர் தலைமையதிபதி ;

(ஐ) 1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்கச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட மத்தியச் சூழல் அதிகாரப் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(ஒ) 1981 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்கச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட தேசிய நீர்வாழ்வள மூலவள ஆராய்ச்சி அபிவிருத்தி முகவர் நிலைய பணிப்பாளர் தலைமையதிபதி ;

(ஓ) 1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட தேசிய கல்வி நிறுவன பணிப்பாளர் தலைமையதிபதி ;

(ஔ) கமத்தொழில் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(க) இலங்கை வர்த்தக, கைத்தொழில் மன்றச் சம்மேளனத் தலைவர் அல்லது அவரது நியமத்தர் ;

(ங) சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் விஞ்ஞான பீடங்களின் பீடத் தலைவர்கள் அல்லது அவர்களது நியமத்தர்கள், அத்துடன்

(2) பின்வரும் ஏனைய உறுப்பினர்கள், அதாவது

(அ) கற்கைச் சபை ஒவ்வொன்றினதும் உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்ட ஓர் உறுப்பினர் ;

(ஆ) கல்வி, உயர்தொழில் அறிவியல், கைத்தொழில் மற்றும் நிர்வாகத் துறைகளில் சிறப்பு வாய்ந்த சேவையை அளித்துள்ள ஆட்களுக்குள் இருந்து ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட ஐந்து உறுப்பினர்கள்.

10. (1) முகாமைச் சபைத் தவிசாளர் சபைக் கூட்டங்கள் எல்லாவற்றிலும் தலைமைதாங்குதல் வேண்டும். தவிசாளர் சபைக் கூட்டமெதிலும் தலைமை தாங்க இயலாதவராகவுள்ளவிடத்து, அத்தகைய கூட்டத்தில் தலைமைதாங்குவதற்கென, அத்தகைய கூட்டத்தில் சமுகமளித்துள்ள உறுப்பினர்கள் தங்களிடையேயிருந்து உறுப்பினர் ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) சபையின் எவரேனும் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர் முன்னரே அவர் பதவியை வறிதாக்கினாலொழிய, விடயத்துக்சேற்றாற்போல அவரது நியமனத் தேதியிலிருந்து அல்லது தெரிவுத் தேதியிலிருந்து கணக்கிடப்பட்ட மூன்றாண்டுக் காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன் மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், எவரேனும் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர் அவரது பதவிக்காலம் முடிவுறுமுன்னர் தமது பதவியை வறிதாக்கினால் அவரை அடுத்து வருபவர், அவர் முன்னரே தமது பதவியை வறிதாக்கினாலொழிய அவர் எந்த உறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக் காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள பாகத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

ஆயின், மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும் எந்த கற்கைச்சபை அவரை சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுத்ததோ அந்தச் சபையின் உறுப்பினராக அவர் இருக்கும் வரை பதவி வகித்தல் வேண்டும்.

(3) முகாமைச் சபையின் தேர்ந்தெடுக்கப்பட்ட எவேரனும் உறுப்பினர், பணிப்பாளருக்கு முகவரியிடப்பட்ட தமது கைப்பட்ட எழுத்தின்மூலம் தமது பதவியிலிருந்து நீங்கலாம்.

(4) முகாமைச் சபையின் நியமிக்கப்பட்ட எவேரனும் உறுப்பினர் ஆணைக்குழுத் தவிசாளருக்கு தமது கைப்பட முகவரியிடப்பட்ட எழுத்தின்மூலம் தமது பதவியிலிருந்து நீங்கலாம்.

(5) வராமைக்கான அனுமதியின்றி சபையின் அடுத்தடுதது மூன்று கூட்டங்களுக்கு வருகை தரத்தவறும் முகாமைச் சபையின் நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர், சபை உறுப்பினராகத் தமது பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், ஆணைக்குழுவானது 9 (2) (6) ஆம் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அதனால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆளொருவரை நியமித்தலும் வேண்டும்.

(6) சபை உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான, அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய வேதனம் அல்லது படிகள் செலுத்தப்பட வேண்டும்.

(7) சபையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் மொத்த உறுப்பாண்மையில் மூன்றிலொன்றாதல் வேண்டும்.

(8) சபையானது அவசியமாகும்போதெல்லாம் கூடுதல் வேண்டும். எவ்வாறாயினும் ஒவ்வோராண்டிலும் ஆறு தடவைகளுக்குக் குறையாமல் அது கூடுதல் வேண்டும்.

(9) பணிப்பாளர் அவசியமெனஅவர் எண்ணுகின்றபோதெல்லாம் அல்லது சபை உறுப்பாண்மையில் மூன்றிலொன்றுக்குக் குறையாதோரிடமிருந்து எழுத்திலான ஒரு தேவைப்பாடு அவரினால் பெறப்படுவதன்மேல் ஒரு வாரத்தினுள், சபையின் விசேட கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும்.

11. (1) சட்டத்தினதும் தோதான ஏதேனும் சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய சபையானது நிறுவகத்தில் போதனை, கல்வி ஆராய்ச்சி, பரீட்சைகள் என்பனமீது சட்டுப்பாடும் பொதுப்பணிப்பும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பந்தியால் சபைக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, சபையானது பின்வரும் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும் :-

(அ) பல்கலைக்கழகத்தின் பணிப்புகளுக்கமைய, நிறுவகத்தின் ஆதனத்தையும் நிதிகளையும் வைத்திருத்தல், கட்டுப்படுத்தல் அத்துடன் நிருவகித்தல் :

(ஆ) சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கிணங்க நிறுவகம் சம்பந்தமான எல்லாச் கருமங்களையும் ஒழுங்குபடுத்தலும் தீர்மானித்தலும் :

(இ) நிறுவகத்தின் வசமுள்ள எவையேனும் நிதிகளைக் குறிப்பிட்ட நோக்கங்களுக்காக நிருவகித்தல் :

(ஈ) நிறுவகத்திற்குச் செய்யப்பட்ட ஆதன, அன்பளிப்புகளை, நன்கொடைகளை அல்லது மானியக் கொடைகளை ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடன் பெற்றுக் கொள்ளுதலும் ஏற்றுக்கொள்ளுதலும் ;

(உ) நிறுவகத்தின் ஆண்டறிக்கையையும் கணக்குகள் பற்றிய ஆண்டுக் கூற்றையும் பரிசீலித்தலும் அத்தகைய அறிக்கையையும் அத்தகைய கணக்குகள் பற்றிய கூற்றையும் பல்கலைக்கழகத்திற்கும் ஆணைக்குழுவுக்கும் சமர்ப்பித்தலும் ;

(ஊ) நிறுவகத்தின் நிதி மதிப்பீடுகளைத் தயாரித்தலும் அத்தகைய மதிப்பீடுகளைப் பல்கலைக்கழகத்துக்கும் ஆணைக்குழுவுக்கும் சமர்ப்பித்தலும் ;

(எ) கற்கைச் சபையின் அல்லது சபைகளின் கலந்தாலோசனையுடன், அறிவியலில் பல்வேறு கிளைகளில் அளிக்கப்படவேண்டிய பட்டப்பின் பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புத் தகைமைகள், அத்துடன் பின்பற்றப்பட வேண்டிய கற்கைநெறிகளும் பயிற்சியும், தேறவேண்டிய பரீட்சைகள் அத்துடன் அத்தகைய பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள் ஏனைய கல்விசார் சிறப்புத் தகைமைகள் என்பவற்றுக்குத் தகைமைபெற விரும்பும் மாணவர்களினால் திருப்தி செய்யப்படவேண்டிய ஏனைய நிபந்தனைகள் என்பன பற்றிப் பல்கலைக்கழகத்துக்கு விதந்துரைத்தல் ;

(ஏ) எக்கருமங்கள் தொடர்பில் துணைவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமங்கள் எவற்றிற்காகவும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய துணைவிதியை ஆக்குதலும் அத்துடன் அத்தகைய துணைவிதிகளின் வரைவுகளை சட்டவாக்கத்திற்கென பல்கலைக்கழகப் பேரவைக்குச் சமர்ப்பித்தலும் ;

(ஐ) எக்கருமங்கள் தொடர்பில் விதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமங்கள் தொடர்பில் விதிகளை ஆக்குதலும் அத்துடன் சட்டவாக்கத்திற்கென பல்கலைக்கழகத்தின் பேரவைக்கு அல்லது மூதவைக்கு துணைவிதிகளின் வரைவுகளைச் சமர்ப்பித்தலும் ;

(ஒ) நிறுவகத்தின் பணியை நடாத்தும் நோக்கத்திற்குத் தேவையான கட்டிடங்கள், வளவுகள், தளபாடங்கள், சாதனம், மற்றும் வேறு பொருள் என்பவற்றை ஏற்பாடு செய்தல் ;

(ஓ) பின்வருவனபற்றி பல்கலைக்கழகத்துக்கு விதந்துரைத்தல் :-

(i) நிறுவகத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படும் பேராசிரியர் பதவிகள், இணைப் பேராசிரியர் பதவிகள், சிரேஷ்ட விரிவுரையாளர் பதவிகள், விரிவுரையாளர் பதவிகள், அத்துடன் வேறு பதவிகள் என்பவற்றை நிறுவுதலும், பேராசிரியர் பதவிகளை, இணைப் பேராசிரியர் பதவிகளை, சிரேஷ்ட விரிவுரையாளர் பதவிகளை, விரிவுரையாளர் பதவிகளை அத்துடன் வேறு பதவிகளை இல்லாதொழித்தலும் அல்லது இடை நிறுத்தலும் ;

(ii) நிறுவகத்துக்கு நியமிக்கப்படவுள்ள ஆசிரியர்களினதும், அலுவலர்களினதும், வேறு ஊழியர்களினதும் தகைமைகள் ;

(ஔ) நிறுவகத்தின் சேவையிலுள்ள ஆட்களை இடைநிறுத்துமாறு, பதவி நீக்குமாறு அல்லது வேறு வகையில் தண்டிக்குமாறு நிறுவகத்திற்கு விதப்புரைகள் செய்தல் ;

(க) நிறுவகத்தின் ஆசிரியர்களாகவும் பரீட்சகர்களாகவும் ஏற்றங்கீகரிப்பதற்குத் தகவுடைய ஆட்களைப் பல்கலைக்கழகப் பேரவைக்கு விதந்துரைத்தல் ;

(ங) இயைபான கற்கைச் சபையிடமிருந்து அல்லது சபைகளிடமிருந்து பெறப்பட்ட அறிக்கைகளைப் பரிசீலித்த பின்னரும், பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடனும் பின்வருவனவற்றை ஆணைக்குழுவுக்கு விதந்துரைத்தல் ;

(i) ஏலவேயுள்ள கற்கைச் சபைகளை மீள ஒழுங்குபடுத்துவதற்கும் புதிய கற்கைச் சபைகளை ஒழுங்குபடுத்துவதற்குமான திட்டங்கள் ;
அத்துடன்

(ii) அறிவியலின் விஷேச கிளைகளை அந்தந்தக் கற்கைச் சபைகளுக்குக் குறித்தொதுக்குதல்.

(ச) அது தகுதியெனக் கருதக்கூடியவாறு அத்தகைய எண்ணிக்கையினவான நிலையியற் குழுக்களை அல்லது நியமித்தக் குழுக்களை நியமித்தல் ; அவற்றின் விசாரணை விடயங்களைக் குறித்துரைத்தல் ; அவற்றின் அறிக்கைகளைப் பரிசீலித்தலும், திரிபுடனோ திரிபின்றியோ அத்தகைய அறிக்கைகளை அங்கீகரித்தலும், அல்லது அத்தகைய அறிக்கைகளை நிராகரித்தலும் ;

(ட) இயைபான கற்கைச் சபையுடனான அல்லது சபைகளுடனான கலந்தாலோசனையுடனும் பல்கலைக்கழகத்தினது ஒருப்பாட்டுடனும், கற்கை நெறிகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான தேவைப்பாடுகளைத் தீர்மானித்தல்

12. அறிவியலில் பின்வரும் விசேஷ துறை ஒவ்வொன்றின் தொடர்பிலும் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் அறிவியல்களிலான அத்தகைய வேறு விசேஷ துறை தொடர்பிலும் நிறுவகமானது முகாமைச் சபையின் விதப்புரையின்மீது கற்கைச் சபையொன்றைத் தாபித்தல் வேண்டும்:-

(அ) உயிர் இரசாயன மற்றும் நுண்கரு உயிரியல் ;

(ஆ) இரசாயன விஞ்ஞானங்கள் ;

(இ) புவி விஞ்ஞானங்கள் ;

(ச) சூழல் விஞ்ஞானங்கள் ;

(உ) கணிதத்துறை ;

(ஊ) பௌதிகவியல் ;

(எ) தாவர விஞ்ஞானங்கள் ;

(ஏ) விஞ்ஞானக் கல்வி ;

(ஐ) புள்ளி விபரவியலும் கணனி விஞ்ஞானமும் ;

(ஒ) விலங்கியல் விஞ்ஞானங்கள் ;

(13) (1) ஒவ்வொரு கற்கைச் சபையும் பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) பணிப்பாளர் ;

(ஆ) பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பீடத்தின் இயைபான பகுதியின் / அலகின் தலைவர் ;

(இ) நிறுவகத்தின் விதப்புரையின்மீது இயைபான கற்கைத்துறையில் விசேஷ அறிவுபெற்ற பல்கலைக்கழக ஆசிரியர்களிடையேயிருந்து சபையினால் நியமிக்கப்பட்ட நான்கு உறுப்பினர்கள்.

(ஈ) அறிவியல் தோதான விசேஷ துறைகளில் முன்னணி வகிக்கும் ஆட்களிலிருந்து சபையினால் நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்கள்.

(2) ஏதேனும் கற்கைச் சபை, சபையின் ஒருப்பாட்டுடன் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்துக்காகவும் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கும் ஒருவரை அல்லது ஒருவருக்கு மேற்பட்டவரை அத்தகைய கற்கைச் சபையின் உறுப்பினரொருவராகச் சேவைக்குச் சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் அவ்வாறு சேர்த்துக் கொள்ளப்பட்ட ஆளெவரும் அத்தகைய கற்கைச் சபையின் தேர்தலில் நிற்பதற்கோ ஏதேனும் கூட்டத்தில் வாக்களிப்பதற்கோ உரிமையுடையவராதலாகாது.

(3) (அ) எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர், முன்னதாகவே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து கணக்கிடப்படும் மூன்று வருடக் காலப் பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன், மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்.

ஆயின் எவ்வாறாயினும், எவரேனும், நியமிக்கப்பட்ட உறுப்பினர் தமது காலப்பகுதி முடிவடையுமுன்னர் தமது பதவியை வறிதாக்கினால், அவரை அடுத்துறுபவர், தமது பதவியை முன்னதாகவே வறிதாக்கினாலொழிய, அவர் எந்த உறுப்பினரை அடுத்து வகிக்கின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக் காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப் பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(ஆ) கற்கைச் சபையின் எவரேனும நியமிக்கப்பட்ட உறுப்பினர் பணிப்பாளருக்கு முகவரியிட்ட தமது கைப்பட்ட கடிதமூலம் தமது பதவியைத் துறக்கலாம் ;

(இ) வராமைக்கான அனுமதியில்லாமல் கற்கைச் சபையின் அடுத்தடுத்து மூன்று கூட்டங்களில் சமூகமளிக்கத் தவறுகின்ற கற்கைச் சபையின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் கற்கைச் சபையின் உறுப்பினரென்ற தமது பதவியை வறிதாக்கியவராகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் சபையானது இந்த ஒழுங்கு விதியின் (1) ஆம் பந்தியின் (இ) என்னும் உட் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அதனால் விளைந்த வெற்றிடத்தை நிரப்புவதற்குப் பொருத்தமான ஆள் ஒருவரை நியமித்தலும் வேண்டும்.

(4) ஒவ்வொரு கற்கைச் சபையும் தவிசாளர் ஒருவரைக் கொண்டிருக்க வேண்டும் : அவர் அச் கற்கைச் சபையினால் அதன் உறுப்பினர்களிடையேயிருந்து தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.

(5) ஒவ்வொரு கற்கைச் சபையும் செயலாளர் ஒருவரைக் கொண்டிருத்தல் வேண்டும் : அவர் கற்கைச் சபையினால் அதன் உறுப்பினர்களிடையேயிருந்து தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.

(6) கற்கைச் சபையொன்றின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண், சேவைக்கெனச் சேர்த்துக்கொள்ளப்பட்ட உறுப்பினர்கள் எவரேனுமிருப்பின் அவர்கள் நீங்களாக, நான்கு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(7) ஒவ்வொரு கற்கைச் சபையும் அவசியமானபோதெல்லாம் கூடுதல் வேண்டும். ஆயின் எவ்வாறாயினும் ஒவ்வோர் ஆண்டிலும் ஆறு தடவைக்குக் குறையாமல் அது கூடுதல் வேண்டும்.

14. (1) சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, ஒவ்வொரு கற்கைச் சபையும் அறிவியலின் இயைபான விசேஷ துறையில் போதனை, ஆராய்ச்சி, பரீட்சைகள் என்பவற்றின் கட்டுப்பாட்டையும் பொதுப்பணியையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவினால் அதற்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுத் தன்மைக்குப் பங்கமின்றி, ஒவ்வொரு கற்கைச் சபையும் அறிவியலின் இயைபான விசேஷ துறை தொடர்பில் பின்வரும் தத்துவங்களையும் கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும் புரிதலும் வேண்டும்:-

(அ) சபையினால் அதற்கு ஆற்றப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமத்தைப் பரிசீலித்து அதன்மீது அறிக்கையிடுதல் :

(ஆ) அறிவியலில் உள்ள அந்த விசேஷ துறையில் கற்கை நெறிகள் போதனை நிகழ்ச்சித் திட்டம், அல்லது நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பரீட்சைகள் என்பவற்றோடு சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்கள் மீதும் சபைக்கு சிபார்சுகளையும் அறிக்கைகளையும் சமர்ப்பித்தல் :

(இ) ஏதேனும் விசேஷ பாடத்தில் அல்லது பாடங்களில் பரிசீலிக்கும் அத்துடன் அறிக்கையிடும் நோக்கத்துக்காக, கற்கைச் சபை உறுப்பினர்கள் அல்லாத ஆட்களை உள்ளடக்கக்கூடியதான குழுக்களை நியமித்தல் :

(ஈ) கற்கை நெறிகளுக்கும் பரீட்சைகளுக்கும் மாணவர்களை அனுமதிப்பதற்கான தேவைப்பாடுகளை சபைக்குச் சிபார்சு செய்தல் :

(உ) ஆசிரியர்களாகவும் பரீட்சகர்களாகவும் அங்கீகரிக்கப்படுவதற்குப் பொருத்தமானவர்களான அத்தகைய ஆட்களைச் சபைக்கு விதந்துரைத்தல் :

(ஊ) அந்த விசேஷ துறையில் பட்டப்பின் படிப்புப் பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள் அத்துடன் வேறு கல்வித் துறைச் சிறப்புகளுக்குத் தகுதியுடைய அறிவியலின் அந்த விசேஷ துறையில் விதித்துரைக்கப்பட்ட பரீட்சைகளில் சித்தியெய்தியதோடு ஏனைய விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளையும் திருப்தி செய்துள்ளவர்களான ஆட்களைச் சபைக்கு விதப்புரை செய்தல்.

(எ) இணையுரிமைப் பரிசில்கள், புலமைப் பரிசில்கள், கல்விச் சிறப்புகள், நிதி உதவிகள், பதக்கங்கள் மற்றும் ஏனைய பரிசுகள் வழங்குவதற்கான போட்டி முறைப்பற்றியும் நிபந்தனைகள் பற்றியும் சபைக்கு விதப்புரை செய்தல் ;

(ஏ) இணையுரிமைப் பரிசில்கள், புலமைப் பரிசில்கள், கல்விச் சிறப்புகள், நிதி உதவிகள், பதக்கங்கள் அத்துடன் வேறு பரிசுகள் என்பன வழங்குவதற்குப் பொருத்தமான ஆட்களின் பெயர்களை சபைக்கு விதப்புரை செய்தல் ;

(ஐ) முகாமைச் சபைக்குப் பின்வருவன தொடர்பாக விதப்புரை செய்தல்;

(i) தற்போதுள்ள கற்கைச் சபைகளை மீள ஒழுங்கமைப்பதற்கும் புதிய கற்கைச் சபைகளை ஒழுங்கமைத்தலுக்குமான திட்டங்கள் ;

(ii) அந்தந்த கற்கைச் சபைகளுக்கு அறிவியல் விசேஷ துறைகளைக் குறித்தொதுக்குதல்.

15. (1) நிறுவகத்தின் பணியாட்டொகுதி, நிறுவகத்தின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றைத் திறமையாகப் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடனும் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தோடு அவசியமென நிறுவகம் கருதக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும், ஆசிரியர்களையும் மற்றும் ஊழியர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் பணியாட்டொகுதி, பல்கலைக்கழகத்தினால் அதன் பணியாட்டொகுதியிலிருந்து விடுவிப்பின்மீது ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும் அல்லது விடயத்திற்கேற்ப ஆணைக்குழுவினால் அல்லது பல்கலைக்கழகத்தினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) பல்கலைக்கழகத்தின் அலுவலர், ஆசிரியர் அல்லது வேறு ஊழியர் ஒருவர், முழுமுநேர அடிப்படையில் நிறுவகத்திற்கான சேவைக்கு விடுவிக்கப்பட்டுள்ளவிடத்து நிறுவகமானது, பல்கலைக்கழகத்தில் அவரது நிலையான பதவிக்குரிய சம்பளத்தையும் படிகளையும் அவருக்குச் செலுத்துதல் வேண்டும். வேறேதேனும் விடயத்தில், நிறுவகமானது சம்பந்தப்பட்ட அலுவலருக்கு, ஆசிரியருக்கு அல்லது வேறு ஊழியருக்கு, பல்கலைக்கழகத்தின் கலந்தாலோசனையுடனும் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தோடும் அது தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய படியைச் செலுத்தலாம்.

(4) நிறுவகத்தின் பணியாட்டொகுதி, பணிப்பாளரின் பணிப்புக்கும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கும் அமைந்ததாகவிருத்தல் வேண்டும்.

16. நிறுவகத்தின் நிதி ஆண்டு அரசாங்கத்தின் அதே நிதியாண்டாதல் வேண்டும்.

17. (1) (இதனகத்துப் பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அறிவியல் பட்டப்பின் படிப்பு நிறுவக நிதியம் என அழைக்கப்பட வேண்டிய நிதியமொன்றை நிறுவகம் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அதற்குள் பின்வருவன செலுத்தப்படலும் வேண்டும் :-

(அ) ஏதேனும் தோதான சாதனத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க நிறுவகத்துக்குச் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் ;

(ஆ) அறக்கொடைகள் மூலமான வருமானம் ;

(இ) பாராளுமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு நிறுவகத்தின் உதவிக்காக மானியங்களாக ஆணைக்குழுவினால் செலவழிக்கப்படும் பணங்கள் :
அத்துடன்

(ஈ) எத்தன்மைத்தான எம்மூலத்திலிருந்தேனும் பெறப்பட்ட நிறுவகத்துக்கு மற்றெல்லா பணங்களும்.

(2) வருவாயின் தோதான தலைப்புகளின்கீழ் வகுதிப்படுத்தப்பட்ட ஒரு குறிப்பிட்ட மாதத்தில் நிதியத்துக்குச் செலுத்தப்பட்ட எல்லாப் பணங்களினதும் பொழிப்பு அடுத்துவரும் மாதம் முடிவடைவதன் முன்னர் ஆணைக்குழுவுக்கு அது அறிந்துகொள்வதற்காக பணிப்பாளரினால் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

18. பின்வருவன பணிப்பாளரின் கடமைகளாதல் வேண்டும்:-

(அ) ஆணைக்குழுவால் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய படிவத்திலும் அத்தகைய முறையிலும் நிறுவகத்தின் கணக்குகளை வைத்திருத்தல் :

(ஆ) நிதியத்துக்குச் செலுத்தப்படும் எல்லாப் பணங்களையும் பெறுதலும் முறையான கணக்குத் தலைப்புகளில் அவற்றை வரவு வைத்தலும் :

(இ) அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளையும் செய்தல் :

(ஈ) ஆணைக்குழுவினால் தேவைப்பட்டவாறான அத்தகைய மூன்றாண்டுக்கொருமுறையான மதிப்பீடுகளையும் அடுத்துவரும் ஆண்டுக்கான வருடாந்த நிதி ஒதுக்கீடுகளையும் சபைக்காகத் தயாரித்தல் :

ஆயின், எவ்வாறாயினும், குறித்த நோக்கங்களுக்காகச் செய்யப்பட்ட மானியக் கொடைகளிலிருந்து அல்லது அறக்கொடைகளிலிருந்து பெறப்பட்ட வருமானம் நிறுவகத்தின் கணக்குகளில் தனிவேறாகக் கணக்கிடப்படுதல் வேண்டும் என்பதுடன், நிறுவகத்தின் பொது நோக்கங்களுக்காக அல்லது அத்தகைய மானியக்கொடைகள் அல்லது அறக்கொடைகள் எந்த நோக்கத்துக்காக அல்லது குறிக்கோள்களுக்காக முறையாகச் செய்யப்பட்டனவோ அந்த நோக்கம் அல்லது குறிக்கோள் தவிர்ந்த எந்த நோக்கங்களுக்காகவும் அல்லது குறிக்கோள்களுக்காகவும் கொடுப்பனவுகள் எவையும் அத்தகைய மானியக்கொடைகளிலிருந்தான அல்லது அறக்கொடைகளிலிருந்தான வருமானத்திலிருந்து செய்யப்படுதலாகாது.

19. (1) ஆணைக்குழு காலத்துக்குக் காலம் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் அத்தகைய விபரங்களைக் கொண்டதாகவும் நிறுவகமானது அதன் செயற்பாடுகள் தொடர்பான கணக்குகள், புள்ளி விபரங்கள் என்பன பற்றிய ஆண்டுக் கூற்றொன்றைத் தயாரித்தல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் கணக்குப் புத்தகங்கள் நிறுவகத்தின் அலுவலகத்தில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

20. எவரேனுமாள், நிறுவகத்தின் ஏதேனும் அதிகார சபையின் அல்லது வேறு குழுவின் உறுப்பினராக இருப்பதற்கு உரிய முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரா, நியமிக்கப்பட்டுள்ளாரா பெயர் குறித்து நியமிக்கப்பட்டுள்ளாரா அல்லது இணைந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரா என்பது பற்றி, அல்லது அத்தகைய உறுப்பினராக இருப்பதற்கு உரித்துடையவராகவுள்ளாரா என்பதுபற்றி ஏதேனும் சந்தேகம் இருக்குமிடத்து அத்தகைய விடயம் ஆணைக்குழுவுக்கு ஆற்றப்படுத்தப்படுதல் வேண்டும் : அதன்மீது ஆணைக்குழுவின் முடிபே இறுதியானதாதல் வேண்டும்.

21. நிறுவகம் தொடர்பிலான ஏதேனும் விடயம் தொடர்பாக ஏற்பாடு எதுவும் இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டிராதவிடத்து சட்டத்திற்கியைபான ஏற்பாடுகள் அத்தகைய விடயங்களுக்கும் அவை தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

22. இக்கட்டளைச் சட்டத்தில்-

"தோதான சாதனம்" என்பது மேற் சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை, கட்டளைச் சட்டம், துணைவிதி, ஒழுங்குவிதி அல்லது விதி என்று பொருளாகும் :

"ஆணைக்குழு" என்பது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்று பொருளாகும்.

"அறிவியலில் உள்ள விசேஷ துறை" என்பது இரசாயன விஞ்ஞானங்கள், புவி விஞ்ஞானங்கள், சூழல் விஞ்ஞானம், பொறித்தொகுதி விஞ்ஞானங்கள், விலங்கியல் விஞ்ஞானங்கள், உயிரிரசாயனவியல் மற்றும் கருமூல உயிரியல், பௌதிகவியல், கணிதவியல், விஞ்ஞானக் கல்வி, புள்ளிவிபரவியல், கணனி விஞ்ஞானம் அல்லது நிறுவகத்தினதும் பல்கலைக்கழகத்தினதும் சிபார்சின்மீது ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் விசேஷ துறை என்று பொருளாகும்.

473/1

A – D 039247 – 1,060 (96/02)